## வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு - 2015

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உப உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் கம்பனியின் தொழிற்பாடு தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இது தொடர்பான விபரமான அறிக்கையொன்று கம்பனியின் தலைவருக்கு 2016 நவம்பர் 21 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் உருவாக்கம் மற்றும் உரித்து

தனியார் துறையின் கம்பனியொன்றாக 1979 ஏப்ரல் 13 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1971 இன் 35 ஆம் இலக்க வியாபாரங்களை கையேற்கும் அதிகாரச்சட்டத்தின் கீழ் 1979 யூன் 05 ஆந் திகதிய 39/04 ஆம் இலக்க அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசினால் கையேற்கப்பட்டது. அவ்வாறே அரசுக்கு சொந்தமான முயற்சிகளை பொதுக்கம்பனிகளாக மாற்றும் 1987 இன் 23 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் இந்த கம்பனி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனியொன்றாவதுடன் அதன் பங்குகளின் உரித்து முழுமையாக திறைசேரியிடம் காணப்படுகின்றது.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தினால் அவசியமாக்கப்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றை தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்பட முடியாத போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 28,391,924 தொகையான கடன்பட்டோர் செலவு மீதியொன்று எதிரீடு செய்யப்பட்டிருந்தமையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் வியாபார கடன்பட்டோர் மீதி அந்த தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

(i) ஆண்டினுள் கிடைத்த முதலீட்டு வட்டியான சுமார் ரூபா 76,292,255 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிருந்தான காசுப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டிற்குரிய மொத்த முதலீட்டு வட்டி வருமானமான ரூபா 79,828,411 அதன் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆண்டினுள் முதலீடு செய்யப்பட்ட பணப்பெறுமதி மற்றும் முதலீடுகளின் மீளளிப்புகள் தனித்தனியாக காசப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டுமெனினும் முதலீடு மற்றும் மீளளிப்புகள் எதிரீடு செய்யப்பட்டு தேறிய முதலீட்டு வருமானமாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 35,120,027 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தால் அரச மானியங்களை கணக்கீடு செய்வதற்காக இனங்காணப்பட்டிருந்த கொள்கைளின் பிரகாரம் சொத்துக்களின் ஆயுட்காலமான 08 வருடங்களினுள் காலக்கழிவாக மானியங்கள் பதிவழிக்கப்பட வேண்டியிருப்பினும் 2008 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அரசாங்க மானியமாக கிடைத்த ரூபா 31,221,094 தொகைக்காக அதற்கு முரணாக காலக்கழிவு செய்யப்பட்டமையால் நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 4,977,045 கூடுதலாகவும் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 638,249 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது தொலைதொடர்பு கோபுர வாடகை வருமானம் ரூபா 2,226,766 இனால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 5,599,348 தொகையான தொலைத்தொடர்பு கோபுர வாடகை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தொலைத்தொடர்பு கோபுரங்களின் பாவனைக்காக தனியார் தொலைத்தொடர்பு நிறுவனமொன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா 963,054 தொகையான மின்சார வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை

(ஈ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தொலைத்தொடர்பு கோபுரத்தினை பயன்படுத்துவதற்காக அந்தக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,098,686 அட்டுறு செலவினத் தொகைக்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) கம்பனியின் ஊழியரொருவருக்கு நட்டஈடாக செலுத்த வேண்டியதாக முன்னைய ஆண்டின் போது நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 946,560 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதித் திகதியிலும் அந்த பெறுமதி அட்டுறு செலவினமொன்றாக நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) கம்பனியால் மீளாய்வாண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட தொலைத்தொடர்பு மற்றும் அலைவரிசை உபகரண இருப்பிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் மற்றும் உண்மையாக இறக்குமதிக்காக செலுத்தப்பட்ட விலைகளுக்கிடையேயான வேறுபாடு ரூபா 2,085,917 உரிய நிலையானச் சொத்துக்கள் கணக்கிற்கு சீராக்கம் செய்யாமல் அது வெளிநாட்டு செலாவணி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட தொலைத்தொடர்பு மற்றும் அலைவரிசை உபகரணங்களின் பெறுமதி ரூபா 42,288,259 ஆக காணப்பட்டதெனினும், வருமான வரிக்கா மூலதனத்தை கணக்கீடு செய்யும் போது அது தவறுதலாக ரூபா 46,131,106 ஆகவும், அதாவது ரூபா 3,842,347 இனால் அதிகரித்து கணக்கீடு செய்தமையால் 33 1/3 சதவீதமான மூலதனக் கொடுப்பனவு ரூபா 1,279,245 இனால் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான வருமானவரி ஒதுக்கம் ரூபா 358,189 இனால் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட முதலீட்டுப் பெறுமதி ரூபா 545,137,461 ஆக இருந்த போதிலும், அதனுள் ரூபா 20,464,650 தொகையான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக பெறவேண்டிய முதலீட்டு வருமானம், பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் முதிர்ச்சியடைவதற்கு முன்னர் முதலீட்டின் முகப்பெறுமதிக்கு சேர்க்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 2,483,462,495 ஆக இருந்ததுடன், பெறுமதிசேர் வரி அறிக்கையினை தயாரிப்பதற்காக வருமானம் ரூபா 2,512,654,691 என கருதியமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெறுமதிசேர் வரி அறிக்கை ஆகியவற்றுக்கு இடையே ரூபா 29,192,196 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறிக்கையினை தயாரிப்பதற்காக வருமானம் ரூபா 2,469,941,098 ஆக கருதியமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி அறிக்கைகளுக்கிடையே ரூபா 13,521,397 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி ரூபா 8,891,820 ஆக இருந்ததுடன், அந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல், 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் மதிப்பிழந்த ரூபா 7,039,708 பெறுமதியான காசோலைகளுக்காக அழிவு நட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் சேவைநாடுனர்களுக்கு கடன் வழங்கும் கொள்கையின் பிரகாரம் 03 மாதக் காலப்பகுதியினுள் கடன் அறவிடப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 1,113,955,478 தொகையான சேவைநாடும் கடன்பட்டோரிடமிருந்து 03 மற்றும் 06 மாதங்களுக்கு இடைப்பட்ட கடன்பட்டோர் மீதியான ரூபா 115,883,732 தொகையும், 06 மாதங்களுக்கு மேற்பட்ட 01 வருடத்திற்கு குறைவான கடன்பட்டோர் மீதி ரூபா 184,922,168 தொகையும், ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 194,041,803 ஆகவும் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான மீள்விற்பனை கடன்பட்டோர் மீதி ரூபா 14,641,723 ஆக இருந்ததுடன், அந்த மீதி 2004 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படும் மீதியொன்றாகவும், அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த மீதியில் ரூபா 14,623,989 இற்காக அழிவுநட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2008 யூலை 28 ஆந் திகதிய பீஈடீ/50 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை, 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை, 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | (i) போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளுக்கான உரித்தற்ற 302 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திறைசேரியின் அங்கீகாரமின்றியும் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக ரூபா 21,493,707 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) தங்களுக்குரிய எரிபொருள் அளவினை மிகைத்து எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், இரு உத்தியோகத்தர்களால் ரூபா 406,656 பெறுமதியான 3,177 லீட்டர் எரிபொருள் அவ்வாறானதொரு அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | பதவியணியின் அனைத்து பதவிகளுக்காகவும் மிகவும் தெளிவாகவும் விபரமாகவும் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியயர்வு நடைமுறையொன்று காணப்பட வேண்டுமெனினும், கம்பனியிடம் அவ்வாறானதொரு நடைமுறை காணப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 433,021,231 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 424,733,393 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,287,838 தொகையான அல்லது 2 சதவீதமான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வருமான அதிகரிப்பிற்கு ஒப்பாக செலவினங்களும் அதிகரித்திருந்த போதிலும் ஆண்டின் வருமான வரி செலவினம் 28 சதவீதத்தினால் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பாரக்கும் போது 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகள் கிரமமாக அதிகரித்திருந்ததுடன், 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் நிதி விளைவுகள் வீழ்ச்சியடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், அரசாங்க வரி

மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை கருத்திற் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் ரூபா 1,791,757,850 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 1,627,426,528 வரை அல்லது 9.2 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் செய்தி ஒளிபரப்பின் போது இடம்பெற்ற அவமானப்படுத்தல்கள் மற்றும் அவர்களின் திரைப்படங்களை அனுமதியின்றி ஒளிபரப்புதல் போன்ற காரணங்களால் வெளித்தரப்பினரொருவரால் கம்பனிக்கு எதிராக 07 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் ஒருவரால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்குகளுக்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 3,105,720 செலுத்தப்பட்டிருந்தது. வெளித்தரப்பினால் தொடுக்கப்பட்ட 07 வழக்குகளுக்குரியதாக கோரப்பட்டிருந்த நட்டஈட்டுப் பணம் ரூபா 2,564,225,000 ஆகும்.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கம்பனியால் வழங்கப்பட்டிருந்த ஒளிபரப்பு நேரத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 13,588,727 தொகையினை அறவிடுவதற்காக வெளித்தரப்பினருக்கு எதிராக 08 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 02 வழக்குகளுக்குரிய பிரதிவாதிகளின் நிரந்தர வசிப்பிடங்களை கண்டறிய முடியாமையால் அந்த வழக்குகளை தொடர்ந்தும் முன்கொண்டு செல்ல முடியாது போயிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சமத்துவமான முயற்சியாண்மை திட்டமொன்றினுள் அர்ப்பணிக்கப்பட்ட ஒட்டுமொத்த தூண்டுதலினால் அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து இலங்கையரினதும் ஒழுக்கநெறியை பாதுகாக்கும் விதத்தில் அனைத்து தரப்பினரதும் எதிர்ப்பார்ப்புக்களை விஞ்சும் வகையில் உயரிய பணியொன்றினை நிறைவேற்றி உயர் தரத்திலான ஆக்கபூர்வமான சேவைகளை வழங்குதல் மற்றும் இலங்கையின் பார்வையினை உலகிற்கு கொண்டு செல்லுதல் கம்பனியின் பிரதான நோக்காகும்.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் கீழ் காணப்படும் சுயாதீன தொலைக்காட்சி சேவை மாத்திரம் 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் இலாபம் ஈட்டியிருந்த போதிலும், வசந்தம் தொலைக்காட்சி, வசந்தம் வானொலி மற்றும் லக்ஹண்ட வானொலி சேவைகள் 2014 மற்றும் 2015 ஆகிய இரு ஆண்டுகளிலும் நட்டமடைந்திருந்தன. அவ்வாறே வசந்தம் வானொலி மற்றும் லக்ஹண்ட வானொலி ஆகியவற்றின் நட்டம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே ரூபா 9,009,480 மற்றும் ரூபா 24,398,029 அல்லது 123 சதவீதம் மற்றும் 55 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வசந்தம் தொலைக்காட்சியின் நட்டம் ரூபா 20,245,492 அல்லது 69.4 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன், சுயாதீன தொலைக்காட்சி சேவையின் இலாபம் ரூபா 24,365,295 இனால் அல்லது 4.8 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரித்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

2010 ஆகஸ்ட் முதல் 2014 யூலை மாதம் வரை கம்பனியின் செயற்பாட்டு பணிப்பாளராக கடமை புரிந்த உத்தியோகத்தர் மாதாந்த போக்குவரத்துப் படியாக ரூபா 40,000 வீதமும் 140 லீட்டர் எரிபொருளுக்காக எரிபொருள் படியினையும் பெற்றிருந்த போதிலும் கம்பனியின் குழாம் வாகனத்தினையும் பயன்படுத்தியிருந்ததுடன், அவ்வாறு பயன்படுத்தப்பட்ட 46,237 கிலோ மீற்றருக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 755,950 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 சனவரி 05 ஆந் திகதி இரவு 07.30 மணியின் பின்னர் நிரற்படுத்தப்பட்ட ரூபா 8,227,333 தொகை பெறுமதியான வர்த்தக விளம்பரங்கள் மற்றும் ஏனைய அனைத்து நிகழ்ச்சிகளையும் இரத்துச் செய்ததன் பின்னர் இரவு 07.30 முதல் 09.30 வரை சனாதிபதி தேர்தல் பிரச்சார ஊர்வலமொன்று நேரலை வாயிலாக இலவசமாக ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் கீழ் காணப்படும் ஏனைய ஊடக நிறுவனங்களுக்கு ஒரு சானாதிபதி வேட்பாளரின் நிரற்படுத்தப்பட்ட தேர்தல் பிரச்சார விளம்பரங்களை ஒளிபரப்புவதற்காக கிடைத்திருந்த ரூபா 25,645,481 தொகையில் நிரற்படுத்தப்பட்ட அனைத்து விளம்பரங்களையும் ஒளிபரப்பாமையின் காரணத்தால் ரூபா 11,026,498 தொகையினை வேட்பாளருக்கு மீள செலுத்த நேர்ந்திருந்தது.

(இ) ஒரு சனாதிபதி வேட்பாளருக்காக ஒளிபரப்புவதற்கு நிரற்படுத்தப்பட்டு பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் விளம்பரங்களை விட அதிகளவு தடவைகள் ஒளிபரப்பப்பட்டமையால் அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 19,091,862 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வேட்பாளரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் சுயாதீன தொலைக்காட்சி சேவையினால் ஒரு வேட்பாளரை விளம்பரப்படுத்துவதற்காக சுமார் ரூபா 101,773,058 பெறுமதியான வர்த்தக தன்மையான விளம்பரங்கள் எதுவித கட்டணங்களும் அறவிடப்படாமல் முன் ஒளிபரப்பு காணொளிகளாக வகைப்படுத்தப்பட்டு ஒளிபரப்பப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக ரேட் காட்களின் மூலம் விலைப்படுத்தப்படாத 55,317 செக்கன்களுக்குரிய வர்த்தக தன்மையிலான விளம்பரங்களும் முன் விளம்பர காணொளிகளாக அந்த வேட்பாளரை விளம்பரப்படுத்தும் நோக்கில் ஒளிபரப்பப்பட்டிருந்தது.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கம்பனியின் ஊழியர் ஒருவரால் 2011 ஆம் ஆண்டின் போது மோசடி செய்யப்பட்ட பணத்தில் மேலும் பெற வேண்டிய ரூபா 1,210,620 தொகை அறவிடப்படாமல் மொத்தப் பெறுமதிக்குமாக அழிவுநட்ட சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

மடொல்சிமா ஒளிபரப்புக்கூடத்தின் நிர்மாணத்திற்காக காணியினைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமையை கருத்திற் கொள்ளாமல் அதன் பொருத்துதல்களுக்காக 2012 நவம்பர் 29 ஆந் திகதி ரூபா 5,791,748 செலவிடப்பட்டு யூ.எஸ்.எவ் அன்ரனா முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன், கொள்வனவு செய்யப்பட்ட அன்ரனா முறைமையின் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்தது. அந்த அன்ரனா முறைமை தாபிக்கப்படாமையால்

2013 செப்தம்பர் முதல் 2015 செப்தம்பர் வரையான காலப்பகுதியினுள் மடொல்சிமா ஒளிபரப்புக்கூடத்தின் நிர்வாக நடவடிக்கைகள் தனியார் நிறுவனமொன்றிற்குரிய தொலைத்தொடர்பு உபகரணங்களை வாடகைக்கு எடுப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கான மின்சாரம், அன்ரனா வாடகை மற்றும் தொலைத்தொடர்பு கூடத்தின் வாடகை என்பன முறையே ரூபா 5,875,737 ரூபா 4,648,934 மற்றும் ரூபா 2,432,640 அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதி வயிலும் கம்பனிக்கு தேவையான பதவியணிக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கு சேவை புரியும் நிரந்தர பதவியணியினர் 656 ஆக இருந்ததுடன், 46 ஒப்பந்த அடிப்படையிலும், 17 சலுகை அடிப்படையிலும் மற்றும் 32 பேர் விற்பனை நிறைவேற்றுநர்கள் உள்ளடங்களாக மொத்த பதவியணி 751 ஆகும்.

## 4.7 சந்தைப்பங்கு

பார்வையாளர்கள் தொலைக்காட்சியை பார்வையிடுதல் மற்றும் வானொலியை செவிமடுத்தல் தொடர்பில் ‘‘வரையறுக்கப்பட்ட லங்கா சந்தை ஆராய்ச்சி பணியகம்’’ (Lanka Market Research Bureau - LMRB) இனால் 15 தொலைக்காட்சி அலைவரிசைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் போது 18.8 சதவீதமாக காணப்பட்ட நிறுவனத்தின் சந்தைப்பங்கு மீளாய்வாண்டின் போது 14.4 சதவீதம் வரை பின்னடைவுக்கு உள்ளாகியிருந்தது. லக்ஹண்ட வானொலி சேவைக்காக 2010 ஆம் ஆண்டின் போது 6.2 சதவீதமாக நிலவிய சந்தைப்பங்கு மீளாய்வாண்டில் இறுதியில் ஒரு சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறெனினும் நிறுவனத்தால் இந்த சந்தை பங்கு குறைவடைந்தமைக்கான காரணங்களை இனங்கண்டு அதனை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், வரைபு ஆண்டறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் நிதிக்கூற்றுக்கள் 2016 மே 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலத்திற்கு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், அதனுள் உள்ளடக்கப்பட வேண்டிய மிகவும் முக்கியமான விடயங்களான நிறுவனத்திடமுள்ள வளங்கள் தொடர்பான விபரங்கள், நிறுவனத்தின் ஒழுங்கமைப்புத் திட்டம், கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான மீளாய்வு என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அது 2015 ஆம் ஆண்டிற்காக மீளாய்வு செய்யப்பட்டு மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது மீளாய்வாண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட செயற்பணிகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சில செயற்பணிகளும் மீளாய்வாண்டின் போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

கம்பனியில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், அதற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒருங்கிணைப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீட்டு குறைபாடுகள் | கோபுர வாடகை வருமானம் மற்றும் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டமை. |
| (ஆ) | பெற வேண்டிய கணக்குகள் | (i) மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) சேவைநாடுநர் கடன்களை அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டமை |
| | | (iii) கடன் எல்லையினை விஞ்சி சேவைநாடுனர்களுக்கு கடன் வழங்குதல். |
| | | (iv) மீள்விற்பனை கொடுக்கல் வாங்கல்களுக்காக சேவைகளைப் பெற்றுக்கொள்ளமை. |
| (இ) | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் திறைசேரி அங்கீகாரமின்றியும் போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தமை. |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | (i) பதவியணியினருக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையொன்று காணப்படவில்லை. |
| | | (ii) பதவியணியினர் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமை. |
| (உ) | சந்தைப் பங்கு | சந்தைப் பங்கு வீழ்ச்சியடைதலை கட்டுப்படுத்துவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்காமை. |